**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

## CC.No.118/2022

PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | தனபால்(PW4) | | |
| Father's Name | கருப்புசாமி | தொழில் | சொந்த தொழில் |
| Village | நம்பியம்பாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | 43 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு ஆரியக்கவுண்டம்பாளையத்தில் மணி மெஸ் என்ற பெயரில் ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 27.01.2022ம் தேதி என் கடைக்கு முன்பாக நடந்த வாகன விபத்து சம்பந்தமாக விசாரிப்பதற்காக போலீசார் மதியம் 1.00 மணியளவில் என் கடைக்கு அருகே வந்து அந்த இடத்தினை பார்த்து படம் வரைந்து எழுதினார்கள். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் மொத்தம் எத்தனை பக்கங்கள் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எத்தனை கையொப்பம் பெற்றார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் கையொப்பம் பெற்ற தாளில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன முறையில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் நான் காவல் நிலையம் சென்று வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N. Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |